(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2 (7).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, சனவரி 24, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிப்பிடப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

பா.121/'11

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ ஹரின் பர்னாந்து

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஏ.டி.சம்பிக பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா மீது நம்பிக்கையின்மை,—

2011 ஏப்ரல் 01 ஆம் திகதி உள்ளூராட்சி அதிகார சபைகளின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கவிருப்பதால், 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறும் என உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். அதாவுல்லா 2011 ஜனவரி 04 ஆம் திகதி பின்வருமாறு கூறி சபைக்கு உறுதியளித்த தனாலும்:

"අද වෙලා තියෙන්නෙ මේකයි. 2011 අප්‍රේල් 01 වැනිදා අපි පළාත් පාලන ආයතනවල අලුත් සභා වාරය කැඳවන්න ඕනෑ. ඒකට ඇත්තටම මාර්තු මාසයේ ඡන්දය තියන්න වෙනවා."

கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர – கோட்டே மற்றும் தெஹிவளை - கல்கிசை மாநகர சபைகள் மற்றும் கொலன்னாவ நகர சபை ஆகியவற்றிற்கான தேர்தல்கள் தற்போது பின்போடப்பட்டுள்ளதுடன் மேலும் சில மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் பின்போடப்படவுள்ளதாக அறிக்கை செய்யப்பட் டுள்ளதாலும்; அத்துடன்

அமைச்சர் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பான கூற்றை வெளியிட்டதன் மூலம் சபையைத் தவறாக வழிநடத்தியுள்ளதனாலும்;

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சராகத் தொடர்ந்தும் தனது பணிகளை நிறைவேற்றுவதற்கான அமைச்சரின் ஆற்றலில் இந்த சபை நம்பிக்கை இழந்துள்ள தெனவும் அவர் அமைச்சரவையில் தொடர்ந்து பதவி வகிப்பதற்கு தகுதியற்ற, பொருத்தமற்ற ஒருவர் எனவும் இந்தச் சபை தீர்மானிக்கின்றது.